இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 301 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 28 – ஞாயிற்றுக்கிழமை 11 ஜூன் 2023 – மதுரை 12 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 301 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 28 - Sunday 11 June 2023 - Madurai 12+8 Pages ₹ 5.00

## காவிரி டெல்டா பகுதியை விட்டுக் கொடுக்க மாட்டோம்! தொடர்ச்சியாக தூர் வாரி

# மண்ணையும் மக்களையும் காப்போம்!

## ‘மேகதாது அணை கட்ட அனுமதிக்க மாட்டோம்!’ - திருச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி !

## காவிரியின் கடைமடை வரை தண்ணீர் செல்வதை உறுதி செய்தது ‘திராவிட மாடல்’ அரசு!

**திருச்சி, ஜூன் 11-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம், காவிரி டெல்டா மாவட்டங்களில் ஆய்வு செய்த பின்னர், திருச்சியில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.**

**அப்பேட்டியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “காவிரி டெல்டா பகுதியை விட்டுக் கொடுக்க மாட்டோம்! தொடர்ச்சியாக தூர்வாரி மண்ணையும் மக்களையும் காப்போம்!” என்று குறிப்பிட்டார்.**

**மேலும் முதல்வர் அவர்கள் அப்பேட்டியில் “மேகதாது அணைகட்ட ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்!”என்று குறிப்பிட்டார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (9.6.2023) காவிரி டெல்டா மாவட்டங்களில் ஆய்வு செய்த பின்னர் திருச்சியில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போது முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது :-

முதலில் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

“திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்ததும் வேளாண்மைத் துறைக்கு கூடுதல் முக்கியத்துவம் தரக்கூடிய வகையில் வேளாண்மைக்கு என தனி பட்ஜெட் தாக்கல் செய்யப்படும்” என்று தேர்தல் உறுதிமொழி கொடுத்தோம். அந்த அடிப்படையில் தொடர்ந்து ஆட்சி அமைந்ததற்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டும் வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதைத் தொடர்ந்து, வேளாண்மைத் துறைக்கு தனி கவனத்தை இந்த அரசு செலுத்திக் கொண்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், காவிரி டெல்டா மாவட்டங்களில் இருக்கக்கூடிய சேத்தியாதோப்பு, மைக்கேல்பட்டி, வடசேரியில் தனியார் மூலம் நிலக்கரிச் சுரங்கம் அமைப்பதற்கான ஏல அறிவிக்கையை ஒன்றிய அரசு வெளியிட்ட உடனே, அடுத்த நிமிடமே நம்முடைய அரசு அதை எதிர்த்துப் போராடியது. ஒன்றிய அரசுக்குக் கடிதம் அனுப்பியது. “ஒருபோதும் இதை அனுமதிக்க மாட்டோம்” என்று சட்டமன்றத்தில் நானே அறிவித்தேன். இதன் விளைவாக, ஏல அறிவிக்கையை ஒன்றிய அரசு ரத்து செய்தது உங்களுக்குத் தெரியும். டெல்டா மக்களுடைய உரிமைகளை விட்டுக் கொடுக்காத அரசாக திராவிட முன்னேற்றக் கழக அரசு தொடர்ந்து செயல்படும்.

அதேபோல, காவிரி டெல்டா பகுதியினுடைய வேளாண் வளர்ச்சிக்கும், இந்தப் பகுதியிலுள்ள ஆறுகள் மற்றும் கால்வாய்களைத் தூர் வாருவதற்கும் முன்னுரிமை அளித்துச் செயல்பட்டுக் கொண்டிருப்பதையும் நீங்களெல்லாம் அறிவீர்கள். அந்த வகையில் காவிரி பாசனப் பகுதியிலுள்ள கால்வாய்களைத் தூர்வாருவதற்காக கடந்த 2021-2022 ஆம் ஆண்டில் 62 கோடியே 91 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 3 ஆயிரத்து 859 கிலோமீட்டர் நீளமுள்ள கால்வாய்களில் தூர்வாரும் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன.

**காவிரி டெல்டா பகுதியில் வரலாற்றுச் சாதனை!**

மேட்டூர் அணை பாசனத்திற்காக திறந்துவிடப்படக்கூடிய நாளான ஜூன் 12-ஆம் தேதி அன்று திறக்கப்பட்டது. அதோடு வேளாண் பெருமக்களுக்கான பல்வேறு உதவிகளெல்லாம் வழங்கப்பட்டன. இதன் விளைவாக காவிரி டெல்டா பகுதியில் வரலாற்றுச் சாதனையை நாம் எட்டினோம்.

4 இலட்சத்து 90 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடியும்,

13 இலட்சத்து 341 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சம்பா சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டு 39 இலட்சத்து 73 ஆயிரம் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டு மிகப் பெரிய சாதனையைப் படைத்தோம். சாதனை என்று சொல்வதை விட, வேளாண் புரட்சியே நடந்தது என்று சொல்லலாம்!

அதனுடைய தொடர்ச்சியாக, 2022-23-ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், காவிரி பாசனப் பகுதிகளில் தூர்வாருவதற்காக 80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடைமடை வரை தண்ணீர் செல்ல வசதியாக தூர்வாரும் பணிகளெல்லாம் துரிதமாக நடந்தது.

**மே 24லேயே மேட்டூர் அணையைத் திறந்தோம்!**

மேட்டூர் அணை மிகச் சீக்கிரமாக மே மாதம் 24-ஆம் நாள் அன்று முன்கூட்டியே திறக்கப்பட்டது. இருந்தாலும், தண்ணீர் வந்து சேருவதற்கு முன்பே 4 ஆயிரத்து 964 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய்களில் அனைத்து தூர்வாரும் பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டன.

உழவர்களுக்கான இடுபொருட்களும், கூட்டுறவு வங்கிக் கடன்களும் முழுமையாகக் கிடைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதன் விளைவாக, 2021-22-ஆம் ஆண்டு சாதனையை முறியடிக்கக்கூடிய வகையில். மற்றுமொரு வரலாற்றுச் சாதனையாக 2022-2023-ஆம் ஆண்டில் 5 இலட்சத்து 36 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் குறுவைச் சாகுபடியும், 13 இலட்சத்து 53 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சம்பா சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டது. இதனால் 41 இலட்சத்து 45 ஆயிரம் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது. வேளாண் புரட்சி தொடர்ச்சியாக நடந்தது.

இந்த ஆண்டும் இதேபோன்ற ஒரு திட்டமிடுதலை தமிழ்நாடு அரசு செய்தது. நீர்வளத் துறை மூலமாக தூர்வாரும் பணிகளை மேற்கொள்வதற்காக 90 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

சேலம், நாமக்கல், அரியலூர், பெரம்பலூர், கடலூர், மயிலாடுதுறை, திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் 4 ஆயிரத்து 773 கிலோமீட்டர் நீளமுள்ள கால்வாய்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 96 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகளும் இன்னும் சில நாட்களில் முழுமையாக முடிக்கப்படும்.

அதோடு வேளாண் பொறியியல் துறை மூலமாக, 5 கோடி ரூபாய் செலவில் ஆயிரத்து 146 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய்களைத் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் 651 கிலோ மீட்டர் தூர்வாரும் பணிகள் முடிந்துள்ளது. எஞ்சியுள்ள 45 விழுக்காடு தூர்வாரும் பணிகள் தொடர்ந்து விரைவாக நடைபெற்று வருகிறது.

அதேபோல, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலமாக, 27 கோடியே 17 இலட்சம் கோடி ரூபாய் செலவில் ஆயிரத்து 433 கிலோமீட்டர் நீளமுள்ள சிறிய கால்வாய்களைத் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. 8 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் 25 எண்ணிக்கையிலான குளம், குட்டை போன்ற நீர்நிலைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டும் மேட்டூர் அணை திறக்கப்படுவதற்கான குறிப்பிட்ட தேதியான ஜூன் 12-ஆம் நாள் அன்று நான் மேட்டூர் சென்று அணையை டெல்டா பாசனத்திற்காக திறந்து வைக்க இருக்கிறேன்.

சென்ற ஆண்டுகளில் நாம் சாதித்துக் காட்டியது போலவே, மேட்டூர் அணையின் நீர் காவிரி டெல்டா பகுதிக்கு வருவதற்கு முன்னதாகவே நான் ஏற்கெனவே உங்களிடம் கூறியபடி அனைத்து தூர்வாரும் பணிகளும் சிறப்பாக முடிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நெல் உற்பத்தியில் புதியதோர் சாதனை!**

கடந்த இரண்டு ஆண்டுகளைப் போல இந்த ஆண்டும் டெல்டா உழவர்கள் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி நெல் உற்பத்தியில் புதியதோர் சாதனை படைப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

கழக ஆட்சியில் வேளாண் உற்பத்தி அதிகம் ஆகி இருக்கிறது. பாசனப் பரப்பு அதிகம் ஆகி இருக்கிறது. இவை அனைத்தும் வேளாண் துறையில் மாபெரும் புரட்சியைக் காட்டுகிறது. தூர்வாரும் பணியை தொடர்ச்சியாகச் செய்து மண்ணையும் மக்களையும் காப்போம் என்பதை நான் உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**கேள்வி:** *கர்நாடகாவில் புதிதாக அமைந்த அரசு, மேகதாது அணை கட்டியே தீருவோம் என்ற முனைப்பில் இருக்கிறார்கள், இது சம்பந்தமாக நீங்கள் அந்த முதலமைச்சருடன் பேசி சுமுக தீர்வு காண்பதற்கு முயற்சி செய்கிறீர்களா?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** புதிதாக வந்திருக்கிற காங்கிரஸ் தலைமையில் இருக்கின்ற ஆட்சி மட்டுமல்ல, ஏற்கனவே இருந்த ஆட்சிகளும் இதையேதான் தொடர்ந்து திரும்பத் திரும்ப மேகதாது அணையை கட்டுவோம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அப்போதும் நாம் எதிர்ப்புத் தெரிவித்து வந்தோம். அதே நிலையில் தான் எங்கள் ஆட்சி இன்றைக்கு இருக்கிறது. அதனால் எந்தக் காரணத்தைக் கொண்டும் கலைஞர் அவர்கள் எப்படி அதில் உறுதியாக இருந்தாரோ, அதே உறுதியோடு இந்த ஆட்சி நிச்சயமாக இருக்கும், அதில் எந்தவிதமான சந்தேகமும் பட வேண்டாம்.

**கேள்வி:** *காப்பீடு திட்டத்தை அரசே நடத்த வேண்டும் என்று உழவர்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள், ஏனென்றால் காப்பீடு திட்டத்தில் முறையாகக் கிடைப்பது இல்லை, நிறைய பிரச்சினைகள் இருப்பதாகச் சொல்கிறார்களே?*

**முதலமைச்சர்:** ஆய்வில் இருக்கிறது. ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம்.

**கேள்வி:** *நூறு நாள் வேலைத் திட்டப் பணியாளர்களைச் சந்தித்தீர்கள், அவர்கள் என்ன கோரிக்கை வைத்தார்கள்? வேளாண் பணிகளை நூறு நாள் திட்டத்தில் கொண்டுவர வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கைகள் இருக்கிறது...*

**முதலமைச்சர்:** அந்த மாதிரி கோரிக்கை எதுவும் இன்று அவர்கள் வைக்கவில்லை. அவர்கள் கொடுக்கும் ஊதியத்தை முறையாகக் கொடுக்க வேண்டும் என்றுதான் கோரிக்கை வைத்தார்கள். அது முறையாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. எங்கெல்லாம் புகார் இருக்கிறதோ, அது குறித்து விசாரிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம்.

**கேள்வி:** *பத்திரிகையாளர் நல வாரியத் திட்டத்தின்கீழ் மதுரையிலும் திருச்சி யிலும் விலை கொடுத்து வாங்கிய பட்டா நிலம் இப்போது இல்லையென்று தகவல் வந்திருக்கிறது. அது சம்பந்தமாக என்ன செய்யப் போகிறீர்கள்?*

**முதலமைச்சர்:** அதை மறுபரிசீலனை செய்து கொடுப்பதற்கான முயற்சி நடந்து கொண்டிருக்கிறது.

**கேள்வி:** *கவர்னர் இன்னும் பல மசோதாக்களுக்கு அனுமதி கொடுக்காமலே இருக்கிறார், இது சம்பந்தமாக தெலுங்கானா அரசுகூட கவர்னரை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்றார்கள். அதுபோன்று ஏதாவது ...*

**முதலமைச்சர்:** நாங்களும் நீதிமன்றத்தை நாடலாமா என்று சட்ட வல்லுநர்களோடு கலந்து பேசிக் கொண்டிருக்கிறோம்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

## கழகம் கடந்து வந்த நீண்ட பயணத்தை

# தலைமுறைகள் தாண்டியும் அறியச் செய்வோம்!

## புதுப்பொலிவூட்டப்பட்ட தி.மு.க. இணையதளத்தை துவக்கிவைத்து

## முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஜூன் 11–

“கழகம் கடந்து வந்த நீண்ட பயணத்தை தலைமுறைகள் தாண்டியும் அறியச் செய்வோம்” என்று முதல்வரும் – கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் புதுப்பொலிவூட்டப்பட்ட தி.மு.க. இணைய தளத்தை துவக்கி வைத்து ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

முதல்வர், கழகத் தலைவர் அவர்கள், நேற்று (10.6.2023), காலை, சென்னை, ஆழ்வார் பேட்டை, சித்தரஞ்சன் சாலையில் உள்ள அவரது இல்லத்தில், புதுப்பொலிவூட்டப்பட்ட தி.மு.க. இணையதளமான DMK.inஐ துவக்கி வைத்தார்.

இவ்விணைய தளத்தினைத் துவக்கி வைத்த கழகத் தலைவர் அவர்கள் தனது ட்விட்டர் பக்கமான https://twitter.com/mkstalin/status/1667399911133024258?S=46ல் பதிவிட்டிருப்பதாவது:–

**“இயக்க வரலாறு, அண்மை நிகழ்வுகள், நமது சாதனைகள் என இன்னும் பல தகவற்புதையல்கள் நிறைந்த, புதுப்பொலிவூட்டப்பட்ட DMK.in கழக வலைதளத்தை #கலைஞர்100 கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இன்று தொடங்கி வைத்தேன்.**

**கையெழுத்துப் பிரதி இதழ்கள் முதல் கணினி வரை கழகம் கடந்து வந்த நீண்ட பயணத்தை தலைமுறைகள் தாண்டியும் அறியச் செய்வோம்!” - எனக் குறிப்பிட்டுள்ளார்.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

---

## மல்லிகார்ஜுன கார்கேவின் கடிதத்திற்கு

# பிரதமர் மோடி பதிலளிக்க மறுப்பது ஏன்?

## ப.சிதம்பரம் கேள்வி!

*புதுடெல்லி ஜூன் 11 -*

*பாலசோர் ரயில் விபத்து பற்றிய எதிர்க்கட்சித்தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவின் கடிதத்திற்கு பிரதமர் மோடி பதில் அளிக்க மறுப்பது ஏன் என்று முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் கேள்வி எழுப்பியுள்ளார்.*

*காங்கிரஸ் மூத்த தலைவரும் ஒன்றிய முன்னாள் அமைச்சருமான ப.சிதம்பரம் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:-*

*பிரதமருக்கு காங்கிரஸ் தலைவர் கார்கே எழுதிய கடிதத்திற்கு நான்கு பா.ஜ.க. எம்.பி.க்கள் அளித்திருக்கும் பதில், எந்த விமர்சனத்தையும் ஏற்றுக்கொள்ளாத பா.ஜ.க.வின் முழுமையான சகிப்புத் தன்மையின்மைக்கு மற்றொரு எடுத்துக்காட்டு என குறிப்பிட்டுள்ளார்.*

*மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவராகவும் இருக்கக் கூடிய கார்கேவுக்கு, பிரதமருக்கு கடிதம் எழுத உரிமை உண்டு. செயல்படக்கூடிய ஜனநாயக நாட்டில், பிரதமர் அந்தக் கடிதத்திற்கு பதில் அளிக்க வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.*

*ஆனால் இதுவெல்லாம் பதில் சொல்லத் தகுதியற்றது என்று பிரதமர் கருதும் அளவுக்கு நமது ஜனநாயகத்தின் தற்போதைய நிலை இருக்கிறது.*



*மாறாக, கார்கேவின் கடிதத்திற்கு நான்கு பா.ஜ.க. எம்.பி.க்கள் அளித்துள்ள பதில் உண்மைத் தன்மை இல்லாததாகவும் வாதத்திற்கு ஒவ்வாததாகவும் உள்ளது.*

*அதேசமயம், கடந்த 2022 டிசம்பரில் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு சி.ஏ.ஜி. அறிக்கைகள் கார்கேவின் குற்றச்சாட்டில் உள்ள நியாயத்தை முழுமையாக உறுதிப்படுத்துகிறது.*

*பாலசோர் போன்ற ஒரு சோகம் நடக்க வாய்ப்புள்ளது என்பதை முன்னறிவிப்பதாக தென்மேற்கு ரயில்வேயின் முதன்மை தலைமைச்செயல் அதிகாரி எழுதிய கடிதம் கோப்புகளில் தூசு தட்டிக்கொண்டிருக்கிறது. அந்த கடிதத்தின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை பா.ஜ.க. எம்பிக்கள் கூறுவார்களா? என்றும் காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் கேள்வி எழுப்பியுள்ளார்.*